**ஹம்பாந்தோட்டை மாநகர சபை - 2023**
**-----------------------------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஹம்பாந்தோட்டை மாநகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) பிரிவு 219 மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, ஹம்பாந்தோட்டை மாநகர சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- மாநகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் மாநகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, இந்த அறிக்கையின் 1.6.1 (உ) அவதானிப்பு தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டின் போது வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்த முறையே 15 கடையறைகளில் இருந்து அறவிடப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 4,640,100 தொகை மற்றும் 04 கடையறைகளில் இருந்து பெற வேண்டிய ஒரே தடவையில் பெறும் பணம் ரூபா 682,000 தொகை திரண்ட நிதியத்திற்கு மற்றும் வருமானக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருக்காததுடன், வைப்பொன்று என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 5 வருடங்களைக் கடந்துள்ள ஒரே தடவையில் பெறும் பணம் காணப்படாமையால் வருமானத்துக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என. | ஒரே தடவையில் பெறும் பணம் வருமானம் ஒன்றென கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2016 ஆண்டில் கொள்வனவு செய்திருந்த ரூபா 663,000 தொகைக்கான தகவல் மற்றும் முகாமைத்துவ முறைமைக்காக வருடாந்த உடன்படிக்கை நாளதுவரை ஆக்கப்படாமையால் நிதிக்கூற்றுக்களில் இருந்து அகற்றப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கணக்கீடு செய்யப்பட வேண்டிய அருவச் சொத்துக்களின் பெறுமதி குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | நிதிக் குழுவின் பரிந்துரையின் படி அருவச் சொத்துக்களின் பெறுமதி கணக்குகளில் இருந்து அகற்றப்பட்டது என. | சொத்துக்களை அகற்றுதல் சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கூட்டுப்பெறுமதி ரூபா 648,344 தொகைக்கான 11 இருப்பு விடயங்கள் இயந்திர உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் பொருத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ரூபா 82,400 தொகை விடயங்களை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும், ஏனைய விடயங்கள் ஒரு வருடத்திற்கு கூடிய காலம் பயன்படுத்தக் கூடியதாக இருப்பதனால் மற்றும் கூடிய பெறுமதி ஒன்று காணப்படுவதனால் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டது என. | இருப்பு விடயங்கள் நிலையான சொத்துக்கள் என கணக்கீடு செய்யப்படக் கூடாது. |
| (ஈ) | நிர்மாண வேலைக் கடன்பட்டோர்களின் பெறுமதி ரூபா 555,948 தொகை மிகையாகவும் செலுத்த வேண்டிய நிர்மாணவேலைக் கடன்கொடுத்தோர் மற்றும் நிர்வாகச் செலவு ரூபா 231,235 தொகை குறைவாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் நாட்குறிப்பு மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | முன்னைய ஆண்டின் போது ஹம்பாந்தோட்டை பொது நூலகத்திற்கு நன்கொடை ஒன்றாக கிடைத்திருந்த கணினி துணைக் கருவிகள் மற்றும் இணைய உபகரணங்களின் பெறுமதி ஆகிய ரூபா 280,674 தொகை முன்னைய ஆண்டின் போது கணக்கீடு செய்யப்பட்டிருக்காமையை மீளாய்வாண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நன்கொடைகள் துணைக் கருவிகளின் சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | சீனுக்குகல நெலும் மாவத்த சுற்றுவட்ட பாதையை அபிவிருத்தி செய்யும் நிர்மாண வேலைக்காக செலுத்தப்பட வேண்டிய ரூபா 146,254 தொகைக்கான 10% தடுத்து வைத்தல் பணம் திருப்பி செலுத்த வேண்டிய வைப்பு ஒன்றென மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2024 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என. | திருப்பி செலுத்த வேண்டிய வைப்புக்களை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (எ) | தொடர்ந்துவரும் ஆண்டிற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 95,638 இற்கான செலவு முற்கொடுப்பனவு என கணக்கீடு செய்யாமல் மீளாய்வாண்டிற்கான செலவொன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | முற்கொடுப்பனவுகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | மூலதன பெறுவனவுகளின் பெறுமதி ரூபா 374,426 தொகை மற்றும் மூலதன நிகழ்ச்சித் திட்டம் ஒன்றின் செலவு ரூபா 272,305 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | மூலதன பெறுவனவுகள் மற்றும் செலவுகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | மதகு நிர்மாணித்தல் மற்றும் நெலும் மாவத்தையை அபிவிருத்தி செய்வதற்குரிய ரூபா 5,898,978 இற்கான மூலதன வருமானம் பௌதீகத் திட்டமிடல், பாதைகள் மற்றும் காணி கட்டிடங்கள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், நலன்புரி சேவை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாமல் இருப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என. | வருமானங்களுக்குரிய நிகழ்ச்சித் திட்டங்கள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

**1.7 இணங்காமை**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் XII பிரிவு 6.1 | இரண்டு நாட்களை விட மிகையாக சுகயீன விடுமுறை பெற்றுக் கொள்ளும் ஊழியர்கள் மருத்துவ சான்றிதழ் ஒன்று பெற்றுக் கொண்டு தாபன தலைவரிடம் சமர்ப்பித்து விடுமுறையை அங்கீகரித்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மருத்துவ சான்றிதழ் சமர்ப்பிக்காமல் 2022 மற்றும் 2023 ஆண்டுகளின் போது 15 சுகாதார தொழிலாளர்களினால் 942.5 நாட்கள் விடுமுறை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | ஒரு சுகாதார தொழிலாளர் இறந்துள்ளார் எனவும் ஏனைய சுகாதார தொழிலாளர்களிடம் மருத்துவ சான்றிதழ் விரைவாக பெற்றுத் தரும்படி கடிதம் அனுப்பப்பட்டது எனவும் பாதைத் தொழிலாளர்கள் நால்வர் மருத்துவ சான்றிதழ் வழங்கியுள்ளது என. | தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 571 | முன்னைய ஆண்டுகள் தொடர்பாக 02 வருடங்களை மிகைத்திருந்த ரூபா 569,337 தொகைக்கான 107 திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்பு மீதிகளை ஆதனவழிப்பு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 25,007,545 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 15,404,146 தொகையாகும்.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| வருமான மூலம் | 2023 மதிப்பீட்டு வருமானம் | 2023 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2023 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2022 மதிப்பீட்டு வருமானம் | 2022 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 13,937,000 | 13,939,528 | 14,205,275 | 6,415,325 | 12,736,600 | 13,408,278 | 12,395,219 | 6,681,072 |
| வாடகை | 41,795,000 | 45,058,599 | 40,905,201 | 7,043,538 | 35,723,700 | 36,718,866 | 37,387,859 | 2,890,140 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 4,027,000 | 5,558,941 | 4,974,331 | 3,340,633 | 3,470,000 | 4,999,700 | 3,682,523 | 2,756,023 |
| ஏனைய வருமானங்கள் | 7,331,000 | 11,279,314 | 11,060,858 | 2,507,983 | 6,132,400 | 7,846,829 | 6,919,199 | 2,289,527 |
| **மொத்தம்** | **67,090,000** | **75,836,382** | **71,145,665** | **19,307,479** | **58,062,700** | **62,973,673** | **60,384,800** | **14,616,762** |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 6516 வீதவரி அலகுகளிலிருந்து பெற வேண்டிய வீதவரி ரூபா 5,558,137 தொகை மற்றும் கடையறைகள் மற்றும் கட்டிடங்கள் வாடகைக்கு கொடுப்பதன் மூலம் 83 அலகுகளில் இருந்து பெற வேண்டிய வாடகை ரூபா 6,548,904 தொகையினை அறவீடு செய்வதற்கு மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் முறையே 252(1) மற்றும் 253(1) பிரிவுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெற வேண்டிய வீதவரி மற்றும் வாடகை என முறையே ரூபா 717,565 தொகை மற்றும் ரூபா 3,546,467 தொகை அறவீடு செய்து மீதியான நிலுவை வாடகைத் தொகைக்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | 28 நிறுவனங்களிலிருந்து குப்பை வரி ரூபா 439,988 தொகை மற்றும் பெற வேண்டிய வாகன வாடகை ரூபா 494,635 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குப்பை வரி ரூபா 315,818 தொகை மற்றும் வாகன வாடகை ரூபா 484,900 தொகை அறவீடு செய்யப்பட்டுள்ளது எனவும் மீதித் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்ய வேண்டும். |
| (இ) | 201 வியாபார மற்றும் கைத்தொழில் அலகுகளில் இருந்து பெற வேண்டிய ரூபா 417,200 இற்கான வாடகை மற்றும் 152 வியாபார அலகுகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 380,000 இற்கான வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவீடு செய்வதற்கு மாநகர | வியாபார மற்றும் கைத்தொழில் வரி ரூபா 9,000 தொகையை அறவீடு செய்து ரூபா 123,000 தொகைக்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 12,500 தொகை | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 247(ஆ) 4 இன் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் நிலுவை மீதியில் ஒரு வருடத்தை மிகைத்துள்ள நிலுவை ரூபா 284,500 தொகையாக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 279,500 தொகை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டிய காலமும் மிகைத்திருந்தது. | அறவீடு செய்யப்பட்டுள்ளது எனவும் மீதித் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும். | |
| (ஈ) | றுஹுனு பிளாஸா கட்டிடத்தின் முதலாம் மாடி மற்றும் இரண்டாம் மாடி குத்தகையாளரினால் சபையுடன் மேற்கொண்டிருந்த வாடகை ஒப்பந்தத்தின் நிபந்தனை இலக்கம் 2.08 இன் படி மாதாந்த கடை வாடகை குறிப்பிட்ட மாதம் 10 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் செலுத்த வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு வாடகை செலுத்துதல் தொடர்ச்சியாக 06 மாதங்கள் புறக்கணித்து இருந்தமையால் உடன்படிக்கை இரத்தாவதுடன் மற்றும் குத்தகைக்கு எடுத்தவரை கட்டிடத்திலிருந்து வெளியேற்றுவதற்கு சபைக்கு அதிகாரம் காணப்படுகின்றது என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந்த நிபந்தனை தொடர்பில் சபையின் முகாமைத்துவத்தினால் கவனம் செலுத்தியிருக்காததுடன் பெற வேண்டிய ரூபா 1,116,000 இற்கான கடை வாடகை மீதியில் 06 மாதங்களை மிகைத்திருந்த ரூபா 855,000 தொகை காணப்பட்டது. | ரூபா 255,000 தொகை அறவீடு செய்யப்பட்டது எனவும் 06 மாதங்களை மிகைத்திருந்த நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக 06 மாதங்களுக்கு சலுகைக் காலம் ஒன்று உள்ளூராட்சி ஆணையாளரினால் வழங்கப்பட்டிருந்தது எனவும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (உ) | பெற வேண்டிய அறிவித்தல் பலகைக் கட்டணம் ரூபா 2,910,983 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் அவற்றில் முன்னைய ஆண்டிற்குரிய பெற வேண்டிய மீதி ரூபா 1,570,783 தொகை காணப்பட்டது. | ரூபா 46,800 தொகை அறவீடு செய்யப்பட்டதுடன், ரூபா 2,864,183 தொகையினை அறவீடு செய்வதற்கு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (ஊ) | 17 நிர்மாண வேலைகளுக்காக ரூபா 84,150 தொகை சுற்றாடல் அனுமதிப்பத்திரக் கட்டண வருமானம் மற்றும் பெற வேண்டிய எழுத்தாணைக் கட்டணம், தண்டப் பணம் மற்றும் சேவைக்கான கட்டணம் ரூபா 2,104,539 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளும் படி எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டது எனவும் மற்றும் எழுத்தாணைக் கட்டணம் ரூபா 114,936 தொகை, சேவைக் கட்டணம் ரூபா 158,880 தொகை மற்றும் தண்ட வட்டி ரூபா 325,287 தொகை அறவீடு செய்யப்பட்டது எனவும் மீதியான நிலுவைத் தொகைக்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது என. | சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு ஊக்குவிக்க வேண்டியதுடன் நிலுவை வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 801,166 தொகை மற்றும் ரூபா 6,980,064 தொகை காணப்பட்டது. | நிலுவை நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 544,675 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 2,461,325 தொகை அறவீடு செய்யப்பட்டுள்ளது என. | நிலுவைத் தொகையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 938,500 இற்கான செலவொன்று மேற்கொண்டு சபையினால் 2016 ஆண்டில் கொள்வனவு செய்திருந்த தகவல் மற்றும் முகாமைத்துவ முறைமை எதிர்பார்த்த விதத்தில் செயற்படாமை மற்றும் நலன்கள் பெற்றுக் கொள்ளாமையினால் மீளாய்வாண்டு செப்தெம்பர் மாதத்தில் நடைபெற்ற நிதி மற்றும் கொள்கைக் குழுக் கூட்டத்தில் தீர்மானத்தின் படி அகற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டமையால் முறைமையை கொள்வனவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த செலவு மற்றும் பராமரிப்புக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த செலவுகளின் கூட்டுத்தொகை ரூபா 1,942,870 தொகையினால் சபை நிதியத்திற்கு நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்தது. | இதன் மூலம் மேற்கொள்ள வேண்டியிருந்த கருமங்கள் ஏதும் நடைபெறாமையால் அதனூடாக சரியான தரவுகள் மற்றும் அறிக்கைகள் பெற்றுக் கொள்வதற்கு முடியாமையால் வருடாந்தம் பராமரிப்புச் செலவு கொடுப்பனவு செய்து சபை நிதியத்திற்கு ஏற்படுகின்ற நிதி நட்டத்தை தவிர்ந்து கொள்வதற்காக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது என. | சொத்துக்கள் ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 மற்றும் 2023 ஆண்டுகளின் போது சபையில் கடமையாற்றிய பிரதியீட்டு/ ஒப்பந்த ஊழியர்களுக்கான மாதாந்த சம்பளத்தில் அரசாங்க சேவை சேமலாப நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை செலுத்தும் போது அதற்குரிய விபரங்களில் குறிப்பிடப்பட வேண்டிய பங்களிப்பாளரின் தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் அங்கத்துவ இலக்கம் காணப்படாமையால் 2022 ஆண்டு திசெம்பர் மாதம் முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையான கூட்டுத்தொகை ரூபா 842,732 இற்கான அரசாங்க சேவை சேமலாப நிதியத்திற்கான | பங்களிப்புத் தொகைக்குரிய உரிய ஊழியர்களின் தேசிய அடையாள இலக்கம் மற்றும் அங்கத்துவ இலக்கம் பூர்த்தி செய்யும் வரை பங்களிப்புத் தொகை சபையின் வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது. | பங்களிப்புத் தொகையை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பங்களிப்புத் தொகை சபையின் வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | நிர்மாண வேலைகளுக்காக சபைக்கு சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றுக் கொண்டிருந்த 02 கட்டிட வரைவுகள் குறிப்பிட்ட அங்கீகரிக்கப்பட்ட அலகை மிகைத்து மேற்கொள்ளப்பட்டிருந்த நிர்மாண வேலைகளுக்காக தேசிய அரச சபையின் 1978 இன் 41 ஆம் இலக்க கொண்ட நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்திற்கு 2021 ஜுலை 8 ஆம் திகதிய 2235/54 இலக்கங் கொண்ட அதிவிஷேட வர்த்தமானியின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த திருத்தத்தின் படி அறவிடப்பட வேண்டிய ரூபா 327,720 இற்கான அணவல் அங்கீகாரம் வழங்கும் கட்டண அறவீடு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் விரைவாக உரிய கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சட்டத்தின் மற்றும் திருத்திய வர்த்தமானியின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மா நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 45 இன் பிரகாரம் சபையினால் அனுபவிக்கப்படும் 80 காணிகளுக்கான சட்டரீதியான உரித்தினை சபைக்கு உரித்தாக்குவதற்கு சபையின் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணிகள் மற்றும் கட்டிடங்களின் உரிமையை உரித்தாக்குவதற்கு குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது என. | சொத்துக்களின் சட்டரீதியான உரிமையை உரித்தாக்க வேண்டும். |
| (ஆ) | 2020 ஆண்டின் போது ஓட்ட நிலையிலிருந்து அகற்றப்பட்டிருந்த 02 வாகனங்கள் திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு அல்லது அகற்றுவதற்கும் மற்றும் 03 வாகனங்கள் சட்டரீதியாக உரிமையை உரித்தாக்குவதற்கும் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஒரு வாகனம் திருத்த வேலை மேற்கொள்வதற்கும் அடுத்த வாகனம் பதிவு செய்யப்பட்ட நிறுவனத்திலிருந்து இணக்கம் பெற்றுக்கொண்ட பின்னர் அகற்றப்படும் எனவும், 03 வாகனங்களை சபைக்கு உரித்தாக்குவதற்காக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது எனவும். | சொத்துக்களை திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு வேண்டியிருந்த போதிலும் அந்த சொத்துக்களின் சட்டரீதியான உரிமையை உரித்தாக்கிக் கொள்ள வேண்டும். |

### 3.4 செயற்திட்டங்கள், கருமங்கள் அல்லது மூலதன வேலைகள் நிறைவேற்றிக் கொள்வதில் தாதமங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆண்டில் செயற்படுத்துவதற்காக வருடாந்த பாதீட்டின் மூலம் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த கூட்டுப் பெறுமதி ரூபா 15,000,000 இற்கு 06 அபிவிருத்தி திட்டங்கள் நிதியம் கிடைக்கப் பெறாமையால் மீளாய்வாண்டின் போது செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சபையின் வருமானம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமையால் அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்வதற்கு முடியாமல் போனது என. | பாதீட்டின் மூலம் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு அபிவிருத்தி திட்டங்கள் செயற்படுத்த வேண்டும். |

### 3.5 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஹம்பாந்தோட்டை மயுரபுர ரொடரி வீடமைப்பு தொகுதியில் சுபத்ரா வீட்டிற்கு அண்மையிலிருந்து ருவன்புர காபட் பாதை வரை மதகு ஹியும் குழாய்கள் பயன்படுத்தி அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 930,374 இற்கான செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மதகின் இரு மருங்கிலும் மண் நிரப்பப்பட்டு பாதையை செப்பனிட்டிருக்காமையால் நிர்மாணிக்கப்பட்டிருந்த மதகு பயன்படுத்த முடியாமல் காணப்பட்டது. | மண் போக்குவரத்துக்காக பிரதேச செயலாளரின் அங்கீகாரம் கிடைத்திருக்காமையால் அங்கீகாரம் கிடைத்த பின்னர் மண் நிரப்பப்பட்டு பாதை செப்பனிப்படும் என. | செலவிடப்பட்ட தொகையினால் உச்சமட்ட பயன் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.6 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி முறையே 169 மற்றும் 189 தொகையாக காணப்பட்டமையால் 05 பதவிகளுக்கான 38 மிகைகளை முறைப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மிகையினை அங்கீகரித்துக் கொள்வதற்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என. | மிகையினை முறைப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சேவையை விட்டுச் சென்றிருந்த 7 ஊழியர்களிடம் பெற வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 35,495 விழா மற்றும் விஷேட முற்பணங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை மீதிகளை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை ஊழியர் கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |